# Plus One Commerce

## - Study Material

## +1 வணிகவியல்

### குறு மற்றும் சிறுவினா விடைகள்

### பாடம் 1 முதல் 5 வரை

Prepared by


# M.Muthu Selvam

M.Sc.,M.Com.,M.Ed.,M.Phil

PG.Asst., (Commerce)

MLWA.Hr.Sec.School

Madurai -1

Mail Id : dhakshina29@gmail.com

Mobile No : 98421 04826

# பண்டமாற்றுமுறை
# Barter System

- பணப் பரிமாற்றம் இடம் பெறாமல், ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் வணிக முறையே பண்டமாற்று வணிக முறையாகும்.



# அங்காடி

Angadi




- பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது
- அப் பொருள்களின் விற்பனை, பகலில் நடந்ததை நாளங்காடி என அழைக்கப்பட்டது..

# அல்லங்காடி

Allangadi

- பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருள்கள் விற்கும் இடத்தினை அங்காடி என அழைக்கப்பட்டது
- அப் பொருள்களின் விற்பனை, இரவில் நடந்ததை அல்லங்காடி என அழைக்கப்பட்டது..



# வணிகம்
## Business




- பொருளாதார நடைமுறைப்பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

# வாணிகம் என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ள பண்டைய நூல்கள்:

- புறநானூறு மற்றும் திருக்குறள்






# மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம்

- பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில், மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப்பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களாகும்.



# மருவூர்பாக்கம் மற்றும் பட்டினப்பாக்கம்



- இவை அங்காடிகளையும், பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.
- வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக நடை பெறும் இடங்களாக இவை இருந்தன.

# பாண்டியர்கள் ஆட்சிக் காலத்தில் வியாபாரம் செய்யப்பட்ட பொருட்கள்:

- தாமிரம், துணி, உப்பு, பூக்கள், சந்தனம், மீன், நெல், தானியங்கள், முத்துக்கள்






# யவனர்கள்




- பண்டைய தமிழக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டவர்கள் யவனர்கள் என அழைக்கப்பட்டனர்

# ஜானகர்

- தமிழர்களுடன் வர்த்தகம் செய்த அரேபியர்கள் ஜானகர் என்று அழைக்கப்பட்டனர்.



# இருபெரு நியாமத்

- இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் மதுரையை ஒரு இருபெரு நியாமத் எனப்படும் தூங்காநகரம் எனக் குறிப்பிடுகிறார்.
- அதாவது இடைவெளியின்றி 24 மணி நேரமும் வியாபாரம் நடந்ததாகக் கூறுகிறார்



# ஆலம்பறை:



- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் தெற்கே 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.
- முக்கியத்துவம்: இது வர்த்தகத்திற்குரிய ஒரு வளமான இடமாக இருந்தது.

# அழகன் குளம்

- வங்காள விரிகுடா பகுதியில் அமைந்துள்ள ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமம்.
- முக்கியத்துவம்: மத்தியதரைகடல் சார் நாடுகளின் மட்பாண்டங்கள் பெரும் எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.



# பண்டைய தமிழ்நாட்டில் கடல் வணிகத்தில் பயன்படுத்திய படகுகளைப் பற்றி கூறுக:





- சிறிய படகு வகைகளான திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம் முதலியன உள்நாட்டு வியாபாரத்திற்கும்,
- பேரளவுகலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்

# பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்ககாலத்தின் பங்கு

- மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு இடையே, அடர்ந்தகாட்டுப் பகுதியில் சாலை அமைத்தும்,
- பெருவழி எனப்படும் தரைவழி நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டும்,



# பண்டைய தமிழ்நாட்டின் வர்த்தக வளர்ச்சியில் சங்ககாலத்தின் பங்கு





- துறைமுகங்கள், கலங்கரைவிளக்கம், பண்டக காப்பகங்கள் என அயல்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை அரசாங்கத்தால் உருவாக்கித் தரப்பட்டிருந்தது.


# பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள்

- 1. கொற்கை
- 2. சாலியூர்
- 3. காயல்பட்டினம்
- 4.மருங்காவூர்பட்டினம்
- 5. குமரி



# செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது

- சாணக்கியரின் அர்த்தசாத்திரம் வழியாக, 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சந்தையின் வரலாற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது.
- வியாபாரம் ஓரிடத்தில் மையப்படுத்தப் பட்டும்,



# செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது



- உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் யாவும் , குறிப்பிடும் ஓரிடத்தில் விற்பனைக்குக் கொண்டு வரச் செய்து, நகரத்தில் வரி செலுத்திய பின் விற்க அனுமதிக்கப் பட்டும்
- உள்ளூர் பொருள்களுக்கு 5 சதவீதமும், வெளிநாட்டுப் பொருள்களுக்கு 10 சதவீதமும் இலாப வரம்பு நிர்ணயிக்கப்பட்டும்,

# செல்வத்தை உருவாக்குவது பற்றி அர்த்தசாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது

- கருவூலம், வரிவிதிப்பு, தொழிற்சாலைகள், வணிகம், விவசாயம், மற்றும் இயற்கை வளங்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதன் வாயிலாக,
- அரசு மேலாண்மை மற்றும் மக்கள் நலன் இரண்டையையும், சமநிலையில் பராமரித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.



# பொருளாதார நடவடிக்கைகள்
# Economic activities

- இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகும்.



# தொழில்

## Business

- இலாபம் ஈட்டும் நோக்குடன், பொருட்களை உற்பத்தி செய்வதும், விநியோகம், கொள்முதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தொழிலாகும்.



# சிறப்புத் தொழில்

## Profession

- அந்தந்த துறையால் , அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.
- ( எ.கா ) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.



# வேலை

## Employment



- கூலி அல்லது ஊதியத்திற்காக மற்றவர்களுக்கு பணி செய்வது வேலை ஆகும்.

# தொழில் செயல்பாடுகளை எந்த அடிபடையில் வகைப்படுத்தப்படுகிறது?
# Classification of Business activities

- அளவு, உரிமை மற்றும் பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது



# சிற்றளவு தொழில்கள்
## Small Scale Business



- குறைந்த மூலதனமும், குறைந்த அளவு பணியாளர்கள் மட்டுமே போதுமான தொழிலமைபிற்கு சிற்றளவு தொழில்கள் எனப்படும்.
- எ.கா : கைத்தறி நெசவு.


# பேரளவு தொழில்கள்
## Large Scale Business

- அதிக மூலதனமும், அதிக அளவு பணியாளர்கள் கொண்ட தொழிலமைபிற்கு பேரளவு தொழில்கள் எனப்படும்.
- எ.கா: ஜவுளி தொழிற்சாலை , உணவு எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை



# மனித செயல்பாடுகள்

## Human activities




- மனிதன் தனது தனிப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை மனிதச் செயல்பாடுகள் என்று பெயர்.
- இவை இரண்டு வகைப்படும். அவை – பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்.

# தொழிலின் கருத்துக்களை (கோட்பாடுகளை ) விவரி. Explain the concept of ‘Business’

- தொழில் என்பது “இலாபம் பெறும் நோக்குடன் வழக்கமாக பொருள்களையும் பணிகளையும் விற்பனை செய்யும், பரிமாற்றம் செய்யும் நடவடிக்கை ஆகும்” என வரையறுக்கப்பட்டிருக்கிறது



# தொழிலின் கருத்துக்களை (கோட்பாடுகளை ) விவரி. Explain the concept of 'Business'




- ஜேம்ஸ் ஸடீபன்சன் - தொழில் என்பது இலாபம் ஈட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளாதார நடவடிக்கை ஆகும்".
- ஹேனே - "தொழில் என்பது பொருள்களை வாங்கி விற்பதன் மூலம் செல்வம் சேர்க்கும் மனித நடவடிக்கை ஆகும்".

# தனியார் நிறுவனங்கள் Private Enterprises

- தனி நபரால் அல்லது தனி நபர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வாகம், கட்டுப்படுத்துதல் முதலினவற்றை மேற்கொள்ளும் தொழில் அமைப்புகள் தனியார் நிறுவனங்கள் எனப்படும்.
- இது அரசால் உருவாக்கப்பட்டது அல்ல.
- எ.கா : தனியாள்வணிகம் , கூட்டாளி நிறுவனம்






# பொதுத் துறை நிறுவனங்கள் :

- அரசாங்கத்தின் மூலமாக அல்லது அரசின் அதிகாரம் பெற்ற முகமை மூலமாக உருவாக்கப்பட்டு, சட்டத்தால் நடத்தப்படும் தொழிலமைப்புகள் பொதுத் துறை நிறுவனங்கள் ஆகும்.
- பொதுத்துறை தொழிலமைப்பின் வடிவங்களாவன.
- 1. துறைவாரி அமைப்பு 2. பொதுக் கழகம் 3. அரசு நிறுமம்




# இணை நிறுவனங்கள் :
## Joint Enterprises

- அரசும், தனிநபரும் ஒருங்கிணைந்து உருவாக்கி கட்டுப்படுத்தும் தொழிலமைப்புகள் இணை நிறுவனங்கள் ஆகும்.
- எ.கா : மாருதி சுசூகி



# வணிகத்தை வரையறுக்க
## Define commerce

- எவ்லின் தாமஸ் அவர்களின் கூற்றுப்படி, “வணிக நடவடிக்கைகள் பொருட்கள் வாங்குதலும் ,விற்றலும் முடிவுற்ற பொருட்கள் பரிமாற்றமும் கொண்டதே ஆகும்”.



# தொழிற்சாலை

## Industry

- ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையைத் தயாரித்து அளிக்கும் நிறுவனங்களையே தொழிற்சாலை என அழைக்கப்படுகின்றது.
- உதாரணம். : சிமெண்ட் உற்பத்தித் தொழில், ஜவுளி உற்பத்தித் தொழில்.



# வியாபாரம்
## Trade

- பொருட்களின் உற்பத்தி கூடத்திலிருந்து நுகரும் மையங்கள் வரை நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் வியாபாரம் எனப்படுகிறது



# போக்குவரத்து Transportation

- உற்பத்தி செய்த பொருட்களை, உற்பத்தி செய்த பகுதியிலேயே அனைத்தையும் விற்பது என்பது அரிது.
- அவற்றை நாட்டின் அல்லது உலகின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நுர்வோர்களுக்கு சென்று சேர்க்கவேண்டியது அவசியம். அப்பணியை போக்குவரத்து செய்கிறது.



- அதாவது உற்பத்தியாளரிடமிருந்து, நுகர்வோருக்கு பொருளை நகர்த்தும் ஒரு ஊடகமாக போக்குவரத்து விளங்குகிறது.

| பிரித்தெடுக்கும் தொழிற்சாலை | மரபுத் தொழிற்சாலை |
|---|---|
| பூமியிலிருந்து தோண்டி எடுக்கும் இயற்கை வளங்களை தூய்மைசெய்து, பிரித்து எடுக்கும் பணியினை இத் தொழிற்சாலைகள் மேற்கொள்கின்றன. | நுகர்வோரின் உபயோகத்திற்காக சில தாவரங்களும், மிருகங்களும் இத் தொழிற்சாலையில் வளர்க்கப்படுகின்றன. |
| நிலக்கரி மற்றும் கச்சா எண்ணை எடுத்தல் இத் தொழிற்சாலைக்கு உதாரணமாகும். | கால்நடைகள் வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, ரப்பர் மரம் வளர்ப்பு, காடு வளர்ப்பு ஆகியவை இத் தொழிற்சாலைக்கு உதாரணமாகும். |

# சேவைத் தொழில்கள் Tertiary industries

- இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன.
- இவ்வகை சேவை வியாபாரம் பலவகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.



# சேவைத் தொழில்கள் Tertiary industries

- எ.கா: மருத்துவ கருவிகள் தயாரிப்பு தொழிற்சாலை, கல்விச் சேவை, தகவல் தொடர்புத் தொழில், சுற்றுலாத் தொழில் வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களான
- வங்கியியல், காப்பீடு, பண்டகச்சாலை ஆகியவை இந்தச் சேவைத் தொழிற்சாலையில் உள்ளடங்கும்.



# வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகள் Characteristics of Commerce

- 1. பொருளாதார நடைமுறைகள் :
- எந்த ஒரு பொருளாதார நடவடிக்கையின் நோக்கமும் இலாபம் ஈட்டுவதேயாகும்.



# வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகள் Three characteristics of commerce

- வணிகம் என்பது இலாபம் ஈட்டுவதற்கான நோக்கோடு மேற்கோள்ளப்படும் எந்த ஒரு பொருளாதார நடவடிக்கைளோடும் தொடர்புடையது.



# வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகள் Three characteristics of commerce

- பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம் :
- வணிகம் என்பது இலாபத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தைஉள்ளடக்கிறது
- இந்தப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதின் நோக்கம் நுகர்வோருக்கு மறுவிற்பனை செய்வதேயாகும்.



# வணிகத்தின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகள் Three characteristics of commerce

- பலன் பெறும் நோக்கம் :
- வணிகத் தொடர்பான நடைமுறைப் பணிகளை மேற்கொள்வதால் பெறும் இலாபமே அப்பணிக்கென கிடைக்கும் பலனாகும்.
- இலாப நோக்கம் அல்லாது செய்யப்படும் எந்த ஒரு செயலும் வணிகத்தின் ஒரு பகுதியாக கருதப்படாது.



## வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.

- இது பொருட்கள் மற்றும் சேவைகளைத் தயாரிப்பாளரிடமிருந்து நுகர்வோருக்குப் பரிமாற்றம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது.
- வணிகம் என்பது வியாபாரம் மற்றும் வியாபாரத்தோடு தொடர்புடைய சில நடவடிக்கைகளை உள்ளடக்கியது.



# வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.




- வணிகம் என்பது இரண்டு வகைப்படும்.
- ஒன்று வியாபாரம் மற்றொன்று வியாபாரத்திற்கு உறுதுணைப்புரிபவை.
- மேலும் வணிகத்தை,உள்நாட்டு வணிகம் எனவும் வெளிநாட்டு வணிகம் எனவும் வகைப்படுத்தலாம்.

# வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.

- உள்நாட்டு வணிகத்தை மொத்தவணிகம் என்றும் சில்லறை வணிகம் என்றும் மேலும் வகைப்படுத்தலாம்



# வணிகத்தை எடுத்துக்காட்டுடன் குறிப்பு வரைக.




- இன்றைய தொழில் நுட்ப சமுதாயத்தில் வணிகச் செயல்பாடுகள் யாவும் மின்னணு வர்த்தகமாக , ரொக்கமில்லா முறைக்கு மாறி இணைய தள வியாபாரம், அலைபேசி வங்கி மற்றும் மின்னணு வர்த்தகம் என விரிவாக்கம் பெற்றுள்ளன.

# தனியாள் வணிகர்

## Sole Trader

- தானே முதலிட்டு, தனது சொந்தத் திறமை மற்றும் அறிவைப்பயன்படுத்தி, எவர் ஒருவர் நிர்வாகத்தை மேலாண்மை செய்கிறாரோ, அவரே தனியாள் வணிகர் எனப்படுகிறார்.



# கூட்டுரு நிறுவனங்கள்
## Non-corporate enterprises

- இவை தனக்கென்ற ஒரு சட்டத் தன்மையைப் பெற்று, ஒரு புனைவு நபர் என்றமுறையில், உரிமையாளர்களிடமிருந்து தனித்த ஒரு இயக்கமாகச் செயல்படுகிறது.
- இதில் உரிமையும், மேலாண்மையும் பிரிக்கப்பட்டிருக்கின்றன



# கூட்டுரு நிறுவனங்கள்
Non-corporate enterprises



- பங்குதாரர்கள் தேர்ந்தெடுக்கும் இயக்குநரவை, நிறுவனத்தை மேலாண்மை செய்கிறது.
  உரிமையாளர்கள் மேலாண்மையில் நேரிடையாகப் பங்கேற்க இயலாது.
- எ.கா : அரசு நிறுவனங்கள், கூட்டுப்பங்கு நிறுமங்கள், கூட்டுறவுத்துறை

# கூட்டுரு சாரா பேரளவுநிறுவனங்கள்

Corporate enterprises

- உரிமையாளர்களும் தொழிலும் ஒன்றாகவே கருதப்படுகிறது.
- இதில் உரிமையும், மேலாண்மையும் ஒருவரையே சாரும்.
- உரிமையாளர் வியாபாரத்தை நேரடியாக கட்டுப்படுத்த இயலும்.
- எ.கா : தனியாள் வணிகம், கூட்டாண்மை நிறுவனம், இந்து கூட்டுக் குடும்பம்.



# பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?

- அ. மளிகை

  ஆ. மருந்துக்கடை

  இ. கைத்தொழில் மையம்

  ஈ. சட்டநிறுமம்

  உ. இணையதளஅமைப்பு



- அ) மளிகை

  ஆ) மருந்துக்கடை

  இ) கைத்தொழில் மையம்

  உ) இணையதள அமைப்பு



ஆகியவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்.

# பின்வருவனவற்றுள் எவை தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்? ஏன்?



- ஏனெனில், மேற்கண்ட தொழில் அமைப்புகளைத் தொடங்க குறைந்த மூலதனமே போதுமானது. அதிக இடர்பாடுகள் அற்றது. விரைவாக தொழில் தொடங்கலாம்.
- மேற்கண்ட தொழிலை நடத்த, எந்தவித சட்டபூர்வமான நடைமுறைகளையும் பின்பற்றத் தேவையில்லை.

# தனியாள் வணிகத்தில் இரகசியத் தன்மை எப்படி காப்பாற்ற இயலும்?

- தனியாள் வணிகத்தில், அவர் ஒருவரே உரிமையாளர் ஆதலால் , தன் வியாபார கணக்குகளையும் , தொழில் சார்ந்த உண்மைகளையும், யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.




- எனவே தனது தொழில் பற்றிய இரகசியத்தை எளிதாக அவரால் காப்பாற்ற முடியும்.

# வரையறாப் பொறுப்பு Unlimited liability

- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
- அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.
- எனவே அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.



# தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.

- 1. தனிநபர் உரிமை
- இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும்.
- அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
- வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.



# தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.

- 2. தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு
- இவர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் யாருடய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
- இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.



# தனியாள் வணிகத்தின் மூன்று பண்புகளை விவரி.

- 3. வரையறாப் பொறுப்பு
- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
- அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.



# தனியாள் வணிகத்திற்கு சில உதாரணங்களை கூறு.

- 1. இனிப்பு கடை
- 2. பெட்டிக்கடை
- 3. அழகு நிலையங்கள்
- 4.தையலகம்
- 5. சலவை நிலயம்
- 6. பழ வியாபாரம்








# தனியாள்வணிகம் வரைவிலக்கணம்

- J.J. ஹேறன்சன் அவர்களின் கூற்றுப்படி, “தனியாள் வணிகம் என்பது வியாபார அலகின் ஒரு வகையாகும். அதில் ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும்”



# கர்த்தா

- இந்து கூட்டுக் குடும்பத்தின், வியாபாரத்தை கட்டுப்படுத்தி, மேலாண்மை செய்யும் குடும்ப தலைமை உறுப்பினர்க்கு “கர்த்தா” அல்லது “மேலாளர்” என்று என்று பெயர்.



# இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்

- (i) தயாபாகா
- (ii) மிட்டாக்சரா



# கூட்டாளி

- பல நபர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்றும்,
- கூட்டாக நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது.



# உறங்கும் கூட்டாளி
## Sleeping Partner or Dormant Partner

- தொழிலில் முதலிட்டு, மேலாண்மையில் பங்கேற்காத கூட்டாளிக்கு, உறங்கும் கூட்டாளி என்று பெயர்.
- ஆனால், இவர் நிறுவனத்தின் இலாப நட்டத்தில் மட்டுமே பங்கேற்பார்
- வெளியாட்களுக்கு, அவர் கூட்டாளி போன்று தோன்றாமல் பார்த்துக் கொள்வார்



# இளவர் கூட்டாளி

- இந்திய பெரும்பான்மைச் சட்டம், 18 வயதை பூர்த்தி அடையாத ஒரு நபரை இளவர் என்று குறிப்பிடுகிறது.
- சட்டத்தின் அடிப்படையில், ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்தால் 21 வயது வரை அவர் இளவராக கருதப்படுகிறார்.



# கூட்டாண்மை கலைப்பு

- இரண்டு வகைப்படும்.
- அவை,
- 1. நிறுவனக் கலைப்பு
- 2. கூட்டாண்மைக் கலைப்பு



# இந்துக் கூட்டுக் குடும்பத் தொழில்

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, ஒன்றாகவே வாழ்ந்து,
- அக்குடும்பத்தின் சொத்துக்களை, ஒன்றாக முதலீடு செய்து, தொழிலை மேற்கொண்டு,



# இந்துக் கூட்டுக் குடும்பத் தொழில்



- அதிலிருந்து கிடைக்கின்ற இலாப நட்டத்தை பகிர்ந்து கொண்டு வாழும் இந்த குடும்பமே,
- இந்து கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படுகின்றது.

# இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிற்ப்பியல்புகள் ஏதேனும் மூன்று

- 1.இந்துச் சட்டத்தின்படி கட்டுப்படுத்துதல்
- இந்து கூட்டுக் குடும்ப வியாபாரம், இந்து சட்டத்தின்படி கட்டுப்படுத்தப்பட்டு, மேலாண்மை செய்யப்படுகிறது.



# இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்று

- 2. மேலாண்மை
- இந்து கூட்டுக் குடும்ப வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது “கர்த்தா” அல்லது “மேலாளர்” ஆவார்.
- அக் குடும்பத்தில் உள்ள அனைவரும் கர்த்தாவின் மேல் முழு நம்பிக்கை உள்ளவர்கள்.
- கர்த்தாவே வெளியாட்களுடன் உடன்படிக்கை செய்ய உரிமை பெற்றவர்.



# இந்துக் கூட்டுக் குடும்பத் தொழின் சிற்ப்பியல்புகள் ஏதேனும் மூன்று




- 3. பிறப்பால் உறுப்பினர்
- இக்குடும்பத்தில் உறுப்பினராக, அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்கவேண்டும்.
- அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண்குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.
- உறுப்பினராக, எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.

# இந்து கூட்டுக் குடும்பத்தில் கர்த்தாவின் பொறுப்பை விவரி.

- இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது
- வியாபாரத்தின் நலனிற்காக, ஒப்பந்தத்தில் ஈடுபடல் மற்றும் வியாபார காரணங்களுக்காக வியாபார சொத்துக்களை அடமானம் வைத்தல், போன்றவற்றை செய்யும் பொறுப்பு இவருக்கு மட்டுமே உண்டு.



# கூட்டு வாரிசுதாரர்

- குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்று பெயர்.
- இந்து கூட்டு குடும்பத்தில் உறுப்பினராக வேண்டும் என்றால், அக்குடும்பத்தில் ஒருவராக பிறக்கவேண்டும்.
- அக்குடும்பத்தில் பிறக்கும் ஆண் குழந்தையே குடும்ப உறுப்பினராக முடியும்.
- உறுப்பினராக எவ்வித சம்மதமோ அல்லது உடன்படிக்கையோ தேவையில்லை.



# கூட்டாண்மை இலக்கணம்

- இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 பிரிவு 4 இன் படி, “எல்லோரும் சேர்ந்தோ, எல்லோருக்காக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தை பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு” ஆகும்



# கூட்டாண்மை இலக்கணம்




- பேராசிரியர் ஹேறனே அவர்களின் கூற்றுப்படி, "தனிபட்ட இலாபங்களுக்காக ஒரு வியாபாரத்தை நடத்த ஒப்புக் கொண்ட நபர்களுக்கிடையே நிலவும் உறவே" கூட்டாண்மையாகும்."

# கூட்டாண்மை நிறுவனத்தில் குறைந்த பட்ச, அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை




- குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 2 பேர்
- அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை : வங்கித் தொழிலாயின் 10 பேர், பிற தொழிலாயின் 20 பேர்





# கூட்டாண்மை ஒப்பாவணம்
## Partnership Deed

- கூட்டாண்மை ஒப்பாவணம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே ஏற்படும் உடன்பாடு ஆகும்.
- இது எழுத்து வடிவிலான ஒரு ஆவணமாக இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை.



**Appendix II: Vendor-Proprietor Agreement***

(No: ______________)

This **Vendor-Proprietor Agreement** (referred hereinafter as "Agreement") is made as of [date] (referred hereinafter as "Effective Date"), by and between [company name], a [company type] with its principal place of business at [address] (the company is referred hereinafter as "Proprietor") and [your company name] a [your company type] with its principal place of business at [your company address] (referred hereinafter as "Vendor").

**RECITALS**

Vendor is engaged in the business of installing and operating automatic vending machines at various business locations and of selling articles of merchandise, food, and beverages to the public through such machines.

Vendor desires to install several automatic vending machines on the premises of Proprietor for the sale of [products to be vend], and Proprietor desires to grant Vendor a license for such purposes on the terms and conditions contained in this agreement.

Therefore, in consideration of the mutual covenants and promises contained herein, it is hereby agreed as follows:

**1. Term.**

This Agreement shall be effective as of the Effective Date and shall have an initial term of [time period in days as well as months]. Upon the expiration of such term (or any renewal term), this Agreement shall automatically renew for additional [time period in days as well as months] unless either party notifies the other party at least time [days in words] ([days in numbers]) days prior to the applicable renewal date of its intention not to renew the Agreement (the initial term and any renewal term shall be collectively referred hereinafter as "Term").

**2. Appointment of Vendor.**

2.1 Grant to Vendor. Subject to all the terms and conditions of this Agreement and the limitations set forth below, the Proprietor hereby grants permission to Vendor to install vending machines at Locations as specified here (referred hereinafter as "Locations"):

| No. | Location Name | Address |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |

** This document is created with the understanding that it will be used only as a free reference for actual agreements or contracts. You should have an attorney review this agreement before using it.*

# கூட்டாண்மை ஒப்பாவணம்
# Partnership Deed



- இருப்பினும், கூட்டாண்மை உடன்பாடு எழுத்து வடிவில் இருந்தால் பிற்காலத்தில் தவறான கருத்துக்களினால் ஏற்படும் தகராறுகளை மற்றும் மனக்கசப்புகளை தவிர்க்கலாம்.

# கூட்டாண்மை ஒப்பாவணம்
## Partnership Deed

- கூட்டாண்மை பற்றிய விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் இதில் அடங்கியிருக்கும்.
- இந்த ஒப்பாவணம் முறையாக தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும்.



# இரகசிய கூட்டாளி

- பொது மக்களுக்குத் தெரியாமல் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக இருப்பவர்.
- மற்ற கூட்டாளிகளுக்கு உள்ளதைப் போன்றே இவரும் கடனிற்கு பொறுப்பாளியாவார்.



# கூட்டு மற்றும் தனி பொறுப்பு
## Joint and Several liability

- நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும், ஒவ்வொரு கூட்டாளிக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புகள்உண்டு.
- நிறுவனத்தின் கடன்களை தீர்க்க கூட்டாண்மையின் சொத்துக்கள் மட்டுமின்றி கூட்டாளிகளின் சொந்த சொத்துக்களும், ஈடாகத் தர வேண்டும்.



# கூட்டு மற்றும் தனி பொறுப்பு
## Joint and Several liability



- கடனீந்தோர் கூட்டாளிகளிடமிருந்து அனைத்துக் கடன்களுக்கும், தொகை பெறும் உரிமையுண்டு.